# ஒன்டாரியோவில் உடல்நலப் பராமரிப்பு:
# அவசரநிலைப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்தல்

உங்களுக்கு உயிரை அச்சுறுத்தும் ஒரு மருத்துவ அவசரநிலை இருந்தால், ஒரு மருத்துவமனை அவசர சிகிச்சை அறைக்குச் செல்லவும் அல்லது உடனடியாக 9-1-1 ஐ அழைக்கவும். உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், 911 ஐ இயக்குபவர் உங்களுக்காக ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்வார்.

1. அவசரநிலைப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பல இடங்களில் மருத்துவமனை ஒரு இடம் மாத்திரமே. சில சமயங்களில் மக்களுக்கு வேறு எங்கு போவது என்று தெரியாததால், அங்கு போகிறார்கள். உங்கள் தெரிவுகள் எல்லாவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு உதவி செய்வதற்காக, அது பற்றிய தகவல்களை நீங்கள் இங்கே காணலாம்:

- அவசரநிலை ஆனால் உயிரை அச்சுறுத்தும் பிரச்சினைகள் இல்லாதபோது உதவியை எங்கே பெற்றுக்கொள்ளலாம்
- உயிரை அச்சுறுத்தும் பிரச்சினைகளுக்கு உதவியை எங்கே பெற்றுக்கொள்ளலாம்

நீங்கள் இந்தத் தகவல் இதழை மேலதிக மொழிகளில் ontario.ca/healthcarebasics என்ற இணையதளத்தில் காணலாம். "வேற்று மொழிகளில் தகவல்கள்" என்ற விசைப் பொறியை அழுத்தவும். ஒன்டாரியோவில் மருத்துவப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வது பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்வதற்கான இணைப்பையும் இந்த இணையதளம் உங்களுக்குக் கொடுக்கும்.

**அவசரநிலை ஆனால் உயிரை அச்சுறுத்தும் பிரச்சினைகள் இல்லாதபோது உதவியை எங்கே பெற்றுக்கொள்ளலாம்**

**2. நான் நோய்வாய்ப்பட்டால் அல்லது காயப்பட்டால் மற்றும் என்ன செய்வது என்பதில் நிச்சயமற்றவனா(ளா)க இருந்தால் யார் உதவி செய்வார்கள்?**

1-866-797-0000 இலிருக்கும் Telehealth Ontario ஐ அழைக்கவும். இது இலவசமானது. நீங்கள் பகல் அல்லது இரவு, எந்நேரத்திலும் அழைக்கக்கூடிய அந்தரங்கமான தொலைபேசிச் சேவை. ஒரு தாதியிடமிருந்து உடல்நலம் பற்றிய ஆலோசனைகள் அல்லது உடல்நலம் பற்றிய பொதுவான

Tamil – Health Care in Ontario: Getting Emergency Care Cat# 015642 Nov/2010 © Queen's Printer for Ontario

தகவல்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் பின்வருவனவற்றுள் எதைச் செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்குத் தாதி உங்களுக்கு உதவி செய்வார்:

- வீட்டில் உங்களை நீங்களே பராமரித்துக் கொள்ளுதல்
- உங்கள் மருத்துவருடன் ஒரு மருத்துவ சந்திப்புத் திட்டத்தை ஏற்படுத்துதல்
- ஒரு கிளினிக்க்கு செல்லுதல்
- ஒரு மருத்துவமனை அவசர சிகிச்சை அறைக்குச் செல்லுதல்

### 3. எனக்கு விரைவான உதவி தேவைப்படுகிறது, ஆனால் எனது பிரச்சினை உயிரை அச்சுறுத்துவதல்ல. அந்நிலையில், உதவிக்கு நான் எங்கே போகவேண்டும்?

உங்கள் குடும்ப மருத்துவர், குடும்ப உடல்நலக் குழு அல்லது விசேட தாதிப் பயிற்சியாளர் சிகிச்சை நிலையத்தை அழைத்து ஒரு சந்திப்புத் திட்டம் இல்லாமல் அல்லது விஸ்தரிக்கப்பட்ட மணி நேரங்களில் அவர்களைச் சந்திக்கமுடியுமா என்பதைக் கண்டறியவும். உங்களுக்கு ஒரு குடும்ப மருத்துவர் இல்லாவிட்டால், நீங்கள் ஒரு வோக்-இன் கிளினிக் நிலையத்தைச் சந்திக்க விரும்பலாம். இந்த அட்டவணை உங்கள் தெரிவுகளை பட்டியலிடுகிறது.

| பின்வருவன போன்ற ஒரு அவசரநிலைப் பிரச்சினை உங்களுக்கு இருந்தால்: | இங்கு உதவியைப் பெற்றுக்கொள்ளவும்: | அவர்கள் உங்களுக்குப் பின்வருமாறு உதவி செய்வார்கள்: |
|---|---|---|
| ஃப்ளூ காய்ச்சல், இருமல்கள் மற்றும் தடிமன்கள், மிகச் சிறிய காயங்கள், மற்றும் மேலும் நீடித்த-கால மருத்துவ பிரச்சினைகள் | ஒரு குடும்ப மருத்துவர் அல்லது வோக்-இன் கிளினிக் | அவர்கள் வழக்கமான அல்லது விஸ்தரிக்கப்பட்ட மணி நேரங்களில் ஒரு சந்திப்புத் திட்டம் இல்லாமல் உங்களைப் பரிசோதிக்கக்கூடும். |
| கண் காயங்கள், புண்கள், அவயவங்களில் முறிவு, ஊடுகதிர்கள் மற்றும் ஆய்வுக்கூடப் பரிசோதனைகள் | அவசரப் பராமரிப்பு நிலையம் (ஏஜன்ட் கெயார் சென்டர்) | ஒரு நாளில் 24 மணி நேரமும், வார இறுதி நாட்கள் உட்பட, ஒரு சந்திப்புத் திட்டமில்லாமல் நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். |

### 4. ஒரு மருத்துவரை அல்லது வேறு உடல் நலப் பராமரிப்பளிப்பவரை நான் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

Health Care Connect உடன் சேர்ந்துகொள்ளவும். இந்த இலவச சேவை இணையதளத்துக்காக நீங்கள் பதிவு செய்யலாம் அல்லது 1-800-445-1822 ஐ அழைக்கலாம். Ontario Health Insurance Plan (OHIP) செல்லுபடியாகும் ஒரு அட்டையை நீங்கள் வைத்திருப்பதற்கு நிச்சயமாக இருங்கள்.

**5. எனது குடும்ப மருத்துவரால் சிகிச்சையளிக்க முடியாத அவசர மருத்துவப் பிரச்சினை எனக்கு இருந்தால் நான் எங்கே போகவேண்டும்?**

உங்களுக்கு மிக அருகிலிருக்கும் வோக்-இன் கிளினிக் அல்லது அவசர பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லவும் அல்லது உங்கள் குடும்ப உடல்நலக் குழுவை, நீங்கள் ஏதாவது ஒன்றில் உறுப்பினராகச் சேர்ந்திருந்தால், அழைக்கவும். பகலில், மாலையில் மற்றும் வார இறுதி நாட்களில் நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த மையங்கள் கண் காயங்கள், புண்கள், அவயவங்கள் முறிதல், எக்ஸ்ரே மற்றும் ஆய்வுகூடப் பரிசோதனைகளின் உதவி செய்வார்கள். உங்களுக்குச் சந்திப்புத் திட்டம் தேவையில்லை – உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் உடனே உள்ளே போகலாம். உங்கள் OHIP அட்டையை உங்களுடன் எடுத்துக்கொண்டுவர மறக்கவேண்டாம்.

## உயிரை அச்சுறுத்தும் பிரச்சினைகளுக்கான உதவியை எங்கே பெற்றுக்கொள்ளலாம்

**6. ஒரு மருந்துவமனை அவசர சிகிச்சை அறைக்கு நான் எப்போது போகவேண்டும்?**

ஒரு அவசர சிகிச்சை அறை  ER எனவும் அழைக்கப்படும். ER ஒரு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அவசர மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் பராமரிப்பை அளிக்கிறது. சாத்தியமாகக்கூடிய உயிரை அச்சுறுத்தும் நோய்கள் அல்லது காயத்துக்காக மாத்திரம் நீங்கள் ER க்கு போவீர்கள்.

**7.  ஒரு அவசர சிகிச்சை அறை (ER) க்கு என்னைக் கொண்டு போகும்படி ஒரு அம்புலன்ஸை அழைக்க முடியுமா?**

மிக அதிக உடல்நல அவசரங்களுக்கு, வான் மூலம் மற்றும் தரை மூலமான அம்புலன்ஸ் சேவைகளை ஒன்டாரியோ அளிக்கின்றது. அம்புலன்ஸ் உங்களை அவசர சிகிச்சை அறைக்கு விரைவாகக் கொண்டுவரும் மற்றும் வரும் வழியில் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காக பயிற்சிபெற்ற நபர்களையும் அளிக்கும். தெருவில், அவர்களின் சங்கொலி மற்ற வாகனங்களை ஒதுங்கும்படி எச்சரிக்கை கொடுத்து பாதையைத் தடங்கலற்றதாக்கும்.

நீங்கள்  மருத்துவமனைக்கு வருவதற்கு  ஒரு அம்புலன்ஸ் தேவைப்பட்டால், Ontario Health Insurance Plan (OHIP) செலவின் பெரும்பகுதியைச் செலவிடும். நீங்கள் ஒரு சிறிய கட்டணத்தைச் ($45) செலுத்தவேண்டும்

*குறிப்பு:* உங்களை மருத்துவமனையில் பார்வையிடும் மருத்துவர் உங்கள் அம்புலன்ஸ் பிரயாணம் மருத்துவரீதியாகத் தேவையற்றது என நினைத்தால், நீங்கள் $240 பணம் செலுத்தவேண்டும்.

8. ஒரு அம்புலன்ஸ் வண்டியை நான் எப்படி வரவழைப்பது?

ஒரு அம்புலன்ஸ் வண்டியை வரவழைப்பதற்கு, எந்தத் தொலைபேசியிலிருந்தாவது 911 ஐ அழைக்கவும். உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், 911 ஐ இயக்குபவர் ஒரு மொழிபெயர்ப்பாளரை உங்களுக்காக ஏற்பாடு செய்வார். அவர்கள் உங்கள் உடல்நலப் பிரச்சினையைப் பற்றிக் கேட்பார்கள்; உங்களுக்கு ஒரு அம்புலன்ஸ் வண்டி தேவைப்பட்டால் அனுப்பி வைப்பார்கள். எந்தத் தொலைபேசியிலிருந்தும் உங்கள் அழைப்பு இலவசமானது.

9. ஒரு அவசர சிகிச்சை அறையை (ER) உபயோகிப்பதற்கு ஒரு OHIP அட்டை எனக்குத் தேவைப்படுமா?

அவசர சிகிச்சை நிலையில், முதலில் உங்கள் அட்டையைப் பார்க்காமலேயே மருத்துவமனைகள் உங்களுக்குச் சிகிச்சை அளிப்பார்கள். ஆனால் உங்கள் மருத்துவமனைக் கட்டணச் சீட்டுகளை Ontario Health Insurance Plan (OHIP) உங்களுக்காகச் செலுத்த வேண்டுமானால், பிற்பாடு உங்கள் அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

10. ஒரு அவசர சிகிச்சை அறையை (ER) நான் சந்திக்கும்போது என்ன சம்பவிக்கும்?

நீங்கள் வந்து சேர்ந்த பின்னர் பின்வருவன சம்பவிக்க நேரிடலாம்:

- முதலில், அவசர சிகிச்சை அறையின் முன்மேசையில் நீங்கள் கையொப்பமிட வேண்டும். இது, நீங்கள் அங்கு வந்திருக்கிறீர்கள் மற்றும் உங்கள் பிரச்சினை என்ன என்பதை மருத்துவமனைப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கும். உங்கள் மருத்துவப் பிரச்சினைக்கு உடனடியான செயற்பாடு தேவைப்பட்டால், ஒரு தாதி அல்லது மருத்துவர் உங்களை உடனடியாகப் பார்வையிடுவார்.

- அடுத்ததாக, நீங்கள் ஒரு ER தாதியைச் சந்திப்பீர்கள். மிக அதிக நோயுள்ள நபர் முதலில் மருந்துவரைச் சந்திப்பதை இந்தத் தாதி நிச்சயப்படுத்திக் கொள்வார்.

- நீங்கள் காத்திருக்கவேண்டியிருந்தால், காத்திருக்கும் பகுதியில் அமர்ந்திருக்கும்படி நீங்கள் கேட்கப்படலாம்.

- பரிசோதிக்கும் அறை ஒன்று தயாரானவுடன் மருத்துவமனைப் பணியாளர் உங்கள் பெயரை அழைப்பார். பரிசோதனை அறைக்குள் ஒரு படுக்கை மற்றும் ஒரு நாற்காலி இருக்கலாம். சில மருத்துவ உபகரணங்களும் அங்கு இருக்கலாம். மருந்துவரைச் சந்திப்பதற்காக நீங்கள் ஒரு குறுகிய நேரம் இங்கு காத்திருக்கவேண்டியிருக்கலாம்.

- மருத்துவர் வந்தவுடன் உங்கள் மருத்துவப் பிரச்சினைகளைப் பற்றி உங்களிடம் பேசுவார் மற்றும் உங்களைப் பரிசோதனை செய்வார். இந்த நிலைமையில், அடுத்து என்ன செய்யவேண்டும் என மருத்துவர் தீர்மானிப்பார். உதாரணமாக, உங்களுக்கு ஒரு எக்ஸ்ரே அல்லது ஒரு பரிசோதனை தேவைப்படலாம். உங்கள் பரிசோதனை முடிவுகளுக்காக நீங்கள் காத்திருக்கவேண்டியிருக்கலாம்.

உங்கள் பிரச்சினையைப் பற்றி மருத்துவர் மேலுமாக அறிந்தவுடன், உங்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படலாம். அல்லது, உங்கள் நிலைமை மேலும் மோசமானதாக இருந்தால், மேலதிக பரிசோதனைகள் அல்லது சிகிச்சைக்காக நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருப்பீர்கள்.

### 11. ஒரு அவசர சிகிச்சை அறைக்குள் (ER), நான் போனால் எவ்வளவு நேரம் காத்திருக்கவேண்டும்?

ER பிரிவில் எவ்வளவு நேரம் நீங்கள் செலவளிப்பீர்கள் என்பதை பின்வரும் அநேக காரியங்கள் பாதிக்கலாம்:

- உங்கள் நிலைமை எவ்வளவு வினைமையானது
- ER பிரிவிற்கு நீங்கள் சென்ற நேரம் மற்றும் நாள்
- நீங்கள் செல்லும் மருத்துவமனையின் அளவு மற்றும் இருப்பிடம்
- மிகப் பெரிய விபத்துக்கள் அல்லது திடீரென ஒரு காய்ச்சல் பரவுதல் போன்ற காரணங்களால் ER பிரிவு எவ்வளவு சுறுசுறுப்பாக இயங்குகிறது
- அறுவைச் சிகிச்சை அல்லது வேறு சிகிச்சைகளுக்காக நீங்கள் மருத்துவமனையில் தங்கவேண்டியிருந்தால்

மருத்துவமனையில் காத்திருக்கும் நேரம் பற்றி இணையதளத்தில் நீங்கள் மேலதிகமானவற்றைக் கற்றுக்கொள்ளலாம்.

### 12. ஒன்டாரியோவிலுள்ள உடல்நலப் பராமரிப்புத் தொகுதியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக எனக்குக் கேள்விகள் இருக்கின்றன. நான் யாரை அழைக்க முடியும்?

காலை 8:30 முதல் மாலை 5:00 மணிவரை சேர்விஸ் ஒன்டாரியோவை இன்ஃபோலைனில் தொடர்பு கொள்ளவும். பணியாளர்களால் பிரெஞ், ஆங்கிலம், மற்றும் வேறு 20 மொழிகளில் உங்களுக்கு உதவி செய்ய முடியும். பின்வரும் எண்ணை அழைக்கவும்:

- 1-866-532-3161
- டிடிவை 1-800-387-5559
- டொரொன்டோவில், டிடிவை 416-327-4282

இங்கு மேலுமதிகத்தை இணையத்தளத்தில் கற்கலாம் health.gov.on.ca